**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 02.03.2026**

**OS.164/2023**

**வா.சா.1 திரு.தங்கமணி**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. கவியரசு என்பவரை திருப்பதிகவுண்டர் மூலமாகதான் தெரியும் என்று சொல்லியுள்ளேன் நான் கவியரசுக்கு கடன் கொடுத்தது திருப்பதி கவுண்டருக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தவறாக சொல்கிறேன் திருப்பதிகவுண்டரிடம் தான் நான் தொகையை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. தொகையும் எனது பார்ட்னர் ஈஸ்வரமூர்த்திதான் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் கொடுத்தேன். நான் ஏற்கனவே சாட்சியம் அளிக்கும்போது கவியரசு வித்யாவிகாஸ் பள்ளியில் பங்குதாரராக உள்ளதாக சொல்லியுள்ளேன் அப்படி ஒரு பள்ளியும் இல்லை, அதில் கவியரசு ஒரு பார்ட்னராகவும் இல்லை என்றால் சரியல்ல.

2. நான் கொடுத்த கடனை பலமுறை சென்று நேரில் கேட்டதாக சொல்லியுள்ளேன் எந்த தேதியில் எங்கு சென்று கேட்டேன் என்றால் தேதி எனக்கு நினைவில்லை, வாணியம்பாடியில் உள்ள விவேகா மெட்ரிக்குலேசன் பள்ளியில் சென்று கேட்டேன், அந்த பள்ளியின் பெயர் தற்போது ஸ்ரீ விவேகாவோ என்று மாற்றிவிட்டதாக கேள்விப்பட்டேன். நான்

சொல்வதுபோல எந்த தேதியிலும் கவியரசுவிடம் பணம் கேட்டதே கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சட்ட அறிவிப்பு எப்போது அனுப்பினேன் என்றால் 22.03.2023–ம் தேதி அன்று அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட் இங்க் பேனாவால் எழுதப்பட்டு அதில் மை பேனாவால் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் தவிர மற்ற விவரங்கள் எழுதப்பட்டது, சாட்சிகள் எழுதப்பட்டது எல்லாமே இங்க் பேனாதான், கையொப்பம் மட்டும் மைபேனாவால் செய்யப்பட்டது என்றால் சரிதான். புரோநோட்டை யார் எழுதியது என்றால் பொன்வேல் என்பவர் எழுதினார்.

3. நான் கவியரசு என்பவரிடம் இருந்து நிரப்பப்படாத வெற்று புரோநேட்டை பெற்று நான் நிரப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. பிரபாகர ரெட்டி என்பவரை தெரியுமாஎன்றால் தெரியும். திருப்பதிகவுண்டர், பிரபாகரரெட்டி என்பவர் மூலம் தான் தெரியும் என்றால் இல்லை. திருப்பதிகவுண்டரை பிரபாகரரெட்டி மூலமாகதான் எனக்கு பழக்கம் ஆனால் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன், ஈஸ்வரமூர்த்தியிடம் இருந்துதான் திருப்பதிகவுண்டர் ரூ.7 இலட்சம் பணம் பெற்றார் என்றால் இல்லை. திருப்பதிகவுண்டர் பெற்ற கடனுக்காக திருப்பதிகவுண்டர் வெற்றுபுரோநோட் 2, அதற்கு ஜாமீனாக கவியரசு ஒரு வெற்று புரோநோட்டும் ஈஸ்வரமூர்த்தியிடம் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை.

4. கவியரசுவுக்கு என்னை யார் என்றே தெரியாது, நீதிமன்றத்தில்தான் அவர் என்னை முதன்முதலில் பார்க்கிறார் என்றால்

சரியல்ல. நானும், ஈஸ்வரமூர்த்தியும் கூட்டாக பைனான்ஸ் நடத்துகிறோம் என்றால் இல்லை. அதனால்தான் அருளாளர் என்பவர் மீது நான் ஒரு காசோலை மோசடி வழக்கும், ஈஸ்வரமூர்த்தி என்பவர் அருளாளர் மீதும் தனியாக ஒரு காசோலை மோசடி வழக்கும் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. ஈஸ்வரமூர்த்தி பணம் கொடுத்ததால்தான் கவியரசுவிடம் பலமுறை பணம் பெற்று கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் இந்த வழக்கில் கண்ட பணம் கவியரசுவிடம்தான் கொடுத்தேன். எந்த தேதியில் கவியரசு என்னிடம் புரோநோட் எழுதிகொடுத்தார் என்றால் 23.03.2022–ம் தேதி அன்று.

5. கடன் கொடுக்கும்போது அப்போது யார் இருந்தார்கள் என்றால் பொன்னுவேல், சக்திவேல் மற்றும் எனது மனைவி ராஜலட்சுமி என்பவரும் இருந்தார். எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால் காலை ஒரு 11 மணி இருக்கும். கவியரசுவுடன் அந்த சமயத்தில் உடன் யாரேனும் வந்திருந்தார்களா என்றால் வேறுயாரும் வரவில்லை. பொன்னுவேல், சக்திவேல் ஆகியோரை நான் தான் வரவழைத்தேனா என்றால் கவியரசுக்கும் அவர்களை தெரியும், நானும் வரசொன்னேன், கவியரசும் வரசொன்னார். வா.சா.ஆ.1 புரோநோட் நான் வீட்டிலேயே வைத்திருந்தேனா என்றால் இல்லை, கவியரசுதான் வாங்கிவந்தார். அந்த புரோநோட்டை கவியரசு கையெழுத்து போட்டுகொடுத்துவிட்டு சென்றாரா என்றால் அப்படி செல்லவில்லை, புரோநோட் கொண்டுவந்து கொடுத்து பொன்னுவேல் எழுதினார், அதற்கு நானும், கவியரசுவும் முகவரி சொன்னோம், கவியரசு

அதில் கையொப்பம் செய்தார். நான் சொல்வது தவறானது ஈஸ்வரமூர்த்தியிடம் இருந்து நிரப்பப்படாத புரோநோட்டை நான் பெற்று அக்கிரம லாபம் அடையவேண்டி அதனை நிரப்பி இந்த வழக்கை கவியரசு மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மோசடியாக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.02 16:53:34 +0530